கோயம்புத்தூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (27.2.2026) நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள செல்லும் வழியில், நிர்மலா மகளிர் கல்லூரியின் மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மடிக்கணினிகளுடன், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. ரங்கநாயகி, துணை மேயர் இரா. வெற்றிசெல்வன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ச.ஜெயந்தி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தகங்களையும் பார்வையிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2026) கோயம்புத்தூர், மகாத்மா காந்தி நினைவகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டபோது மகாத்மா காந்தியடிகளுக்கு பிடித்தமான பஜனை பாடல்களை மாணவ – மாணவியர் பாடியதை கேட்டு ரசித்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.இ. பிரகாஷ், ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, மேயர் திருமதி ரங்கநாயகி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி தலைவர் டாக்டர் கிருஷ்ணராஜ் வானவராயர், ஜி.டி. குழுமத்தின் தலைவர் கோபால், மகாத்மா காந்தி நினைவகத்தின் அறங்காவலர் ராஜ்குமார், சாந்தி ஆசிரமத்தின் தலைவர் டாக்டர் வினு அறம் மற்றும் மகாத்மா காந்தி நினைவகத்தின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2026) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் எஸ்.கே. பிரபாகர் அவர்களின் மகன் டாக்டர் பி. அஜய்குமார் – ஜி. மனிஷா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லட்சுமணன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.2.2026) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 48வது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2026) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் எஸ்.கே. பிரபாகர் அவர்களின் மகன் டாக்டர் பி. அஜய்குமார் – ஜி.மனிஷா இணையர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லட்சுமணன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

தொகுதிப் பங்கீடு: தி.மு.க. - கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பேச்சுவார்த்தை!

2026 சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட தி.மு.க. தொகுதி பங்கீட்டு குழுவுடன் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் குழுத் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தலைமையிலான குழுவினருடன் பேச்சுவார்த்தை நடந்தது.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் - பரப்புரை!

பெண்களின் உரிமைகளை உறுதி செய்த ‘திராவிட மாடல்’ அரசு!

சென்னை,மார்ச் 1–

சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கழக மகளிரணி சார்பில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் தேர்தல் பரப்புரையானது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள் நேரடியாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரை செய்து வருகின்றனர்.

இன்றைய பரப்புரையின் போது திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மட்டுமல்லாது, பெண்களின் சம வாய்ப்பு, சம உரிமைக்கும் , முன்னேற்றத்திற்கும் திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளையும் பட்டியலிட்டு விளக்கினர் ஸ்டாலினின் மகளிர் படையினர்.

அரசுப்பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 40% ஆக அதிகரிக்கப்பட்டது. உள்ளாட்சியில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தியது, பெண்கள் வாங்கும் பத்துலட்சம் வரையிலான சொத்துக்கு 1% பத்திரப்பதிவு கட்டணவிலக்கு, பெண் ஓதுவார்கள் நியமனம் என பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு மகளிருக்கான அரசியல் அதிகாரத்தையும், நியாயமான உரிமைகளையும் உறுதி செய்துள்ளது திராவிட மாடல் அரசு என்பதை ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்து சென்று சேரக்கப்பட்டது.

உள்ளாட்சியில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டினை அமல்படுத்தியதன் மூலம் 11 பெண்கள் முதன்முறையாக அரசியல் அதிகாரமிக்க மேயர் பதிவியைப் பெற்றுள்ளனர். அதேபோல கவுன்சிலர்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கான அரசியல் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னையின் முதல் பெண் மேயரான திருமதி.பிரியா ராஜன் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரை செய்தார். அதேபோல காஞ்சிபுரம் மேயர் திருமதி. மகாலட்சுமியும் அவர்களும் ஒவ்வொரு வீடாக சென்று ஆதரவு திரட்டினார். வீட்டு மகளிர்களோடு இயல்பாக அமர்ந்தும் , அவர்களின் வேலைகளை பகிர்ந்து கொண்டும் பரப்புரை மேற்கொண்டனர் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள்.